உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சுபகிருது வருடம் பங்குனித் திங்கள் பெப்ரவரி 2024 | பூமி–13



## ஆதித் திருக்கோயில்களை காப்பாற்ற வேண்டும்



சைவ மக்களின் ஆதித் திருக்கோவில்களை காக்க வேண்டியது எம் தலையாய கடமையாகும். சமீப காலத்தில் தொல்லியல் என்ற பெயரிலும்,பௌத்த அடையாளங்கள் என்ற பெயரிலும் ஆதிச் சைவ திருக்கோயில்களின் அடையாளங்களை அகற்றும் செயற்பாடு எம் நாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. பல தடவை சைவ சமய நிறுவனங்களும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பாக குரல் கொடுத்த போதிலும் இது வரை அரசாங்கம் இந்த பிரச்சினையை தீர்ப்பதாக இல்லை.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த வெடுக்குநாறி ஆதிச் சிவன் கோவில் தற்பொழுது ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் அடையாளமாக மகா

சிவராத்திரி அன்று அங்கு நடைபெற்ற அசிங்கமான செயற்பாடு வேதனைக்குரியது.

பூசை வழிபாட்டுக்காக சென்ற மக்களையும் பூசகரையும் துன்புறுத்தி பூசகரையும் ஏனைய சில பக்தரையும் கைது செய்தது சைவ மக்களிடையே மிகுந்த கவலையை ஏற்படுத்தி இருக்கிறது. இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். எதிர்காலத்தில் இந்த நாட்டில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்த நோக்கம் இருப்பின் திட்டமிட்டு செய்யப்படுகிற இத்தகைய செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும். எந்தக் காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளால் சமாதானத்தை உருவாக்க முடியாது என்பதை வெளிப்படையாகும். உண்மையான சமாதானம் உண்மையான சமத்துவ உரிமையை வழங்குவதற்கு தென்னிலங்கை அரசியல் வாதிகள் விரும்புகின்றார்களா என்ற கேள்வி இப்பொழுது எழுந்திருக்கின்றது.

இந்நிலையில் இருந்து சுமூகமான நிலையை உருவாக்குவதற்கு அயல் நாடாகிய இந்திய அரசாங்கம் இந்த விடயங்களில் அக்கறை எடுக்க வேண்டும். இலங்கை இன பிரச்சினையில் ஏதோ ஒரு வகையில் இந்திய அரசாங்கத்தினுடைய பங்களிப்பு ஆரம்பத்திலிருந்து இடம்பெற்று வருகிறது. இந்திய அரசாங்கம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை செய்த போதும் இன்று வரை அந்த ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட உரிமை எதுவும் நாம் அனுபவிக்க முடியவில்லை. இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும் இந்திய அரசு பாராமுகமாக இருப்பது கவலையளிக்கிறது. இந்திய அரசாங்கம் இனிமேலாவது உடன் நடவடிக்கை எடுத்து எங்களுக்குரிய உரிமைகளை வழங்கி எங்களுடைய சமயத்தினுடைய தொன்மைகள் அழிந்து போகாமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்தல் காலத்தின் கட்டாயமாகும்.

**ஆசிரியர்**
கலாநிதி. செஞ்சொற்செல்வர்.
ஆறு. திருமுருகன்

**உதவி ஆசிரியர்**
திரு. ச. சந்தோஷன்

**வடிவமைப்பாளர்**
செல்வி. க. யதுஷிகா

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் திருவிழாக்கள்

வரலாற்று சிறப்புமிக்க பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் பொங்கல் இவ்வருடம் 18-03-2024, 25-03-2024, 01-4-2024, 08-04-2024 ஆகிய நான்கு திங்கள்கிழமைகளில் இடம்பெறவுள்ளது . எனினும் அம்பாள் ஆலயம் கடந்த 11-09-2023 திங்கள்கிழமை அன்று பாலஸ்த்தாபனம் நிகழப்பெற்று ஆலய அபிஷேகமண்டபம், தம்பமண்டபம், வசந்தமண்டபம் உள்ளிட்ட திருப்பணிவேலைகள் நடைபெற்று வருகிறது.எனவே இக்காலப்பகுதியில் திருவிழா(திருவீதியுலா) இடம்பெறமாட்டாது ஆயினும் பங்குனித்திங்கள் கிழமைகளில் பூசைவழிபாடுகள் அதிகாலை 5.00மணிக்கு உஷத்காலப் பூசையுடன் ஆரம்பமாகி காலை,மாலை அபிஷேகம் விஷேடபூசை, பொங்கல் படையல், அர்ச்சனை என்பன வழமைபோன்று இடம்பெற்று இரவு 9.00 மணிக்கு அர்த்தசாமப்பூசையுடன் பங்குனித்திங்கள் பொங்கல் வழிபாடுகள்நிறைவு பெறும் . பக்தர்கள் புனித தீர்த்தக்கேணியில் நீராடி விரதமிருந்து பொங்கல், படையல், அர்ச்சனை உள்ளிட்ட தமது நேர்த்திகள், வழிபாடுகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்.





# மகா கும்பாபிஷேகத்திற்கு தயாராகும் தெல்லிப்பளை துர்க்கையம்மன்

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபி‘ேக திருப்பணி வேலைகள் முழு வீச்சில், நடைபெற்று வருகின்றது. இரவு பகல் பாராது பல பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள்.




வரும் பங்குனித்திங்கள் 12ம் நாள் 25.03.2014ம் திகதி திங்கட்கிழமை பௌர்ணமி திதியும் உத்தர நட்சத்திரமும் சித்த யோகமும் பாலவ கரணமும் இடப லக்கினமும் பொருத்திய காலை 9.25 மணி தொடக்கம் காலை 10.33 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் துர்க்காதேவிக்கு மாபெரும் குடமுழுக்கு விழா நடைபெறவுள்ளது.

21.03.2024 நண்பகல் 12 மணி முதல் 24.03.2024 மாலை 2.00 மணி வரை எண்ணெய்க்காப்பு நடைபெறும்.வரும் 20.03.2024ம் திகதி தொடக்கம் 25.03.2024ம் திகதி வரை கிரியா கால நிகழ்வுகள் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

திருப்பணி வேலைகள் மற்றும் கும்பாபிசேகத்திற்குரிய நன்கொடைகளை தேவஸ்-தான நிதி அலுவலகத்தில் வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது தேவஸ்தான கும்பாபிசேக திருப்பணி வங்கி கணக்கில் வைப்பிலிடவும். கணக்கு விபரங்கள்:-

இலங்கை வங்கி சுன்னாகம் கிளை,
கணக்கு இலக்கம் 77683985.

















ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்





# சிறப்பாக நடந்த சிவராத்திரி வழிபாடுகள்

இலங்கையின் பல பாகங்களிலும் சிவராத்திரி தினத்தன்று பல பக்தர்கள் ஒன்று கூட மிகச் சிறப்பாக வழிபாடுகள்இடம்பெற்றன.

**கொழும்பு பொன்னம்பகவானேஸ்வரம்**





**திருக்கேதீஸ்வரம்**









## திருக்கோணேச்சரம்



## நகுலேச்சரம்







## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்







## முன்னேச்சரம்








## திருமந்திர அரண்மனை மட்டக்களப்பு







## திருவாசக அரண்மனை நாவற்குழி







# ஆன்மீக பூமியாகும் கலகா

கண்டி சிவபூமி மலையக ஆச்சிரமத்தில் தமிழ் மாணவர்களுக்கு அறநெறி வகுப்புக்களுடன் பல்வேறு வகையான உட, உள ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன. மலையகத்தை சேர்ந்த பெருமளவு இளைஞர்கள் இந்த நிகழ்வுகளில் விருப்பத்தோடு பங்குபற்றி பயனடைந்து வருகிறார்கள்.









# நல்லூரில் நடைபெற்ற இசை ஆராதனை



ஈழ நல்லூர் சாரங்கம் இசை மன்றம் நடாத்திய சற்குரு தியாகராஜ சுவாமிகளின் 177 ஆவது இசை ஆராதனை விழாவும்,மூத்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் 29.02.2024 மாலை கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஈழத்தின் பல இசைக் கலைஞர்கள் பங்குபற்றிய இசை ஆராதனை நிகழ்வும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. மூத்த நாதஸ்வர இசைச் சக்கரவர்த்திகளான கலாநிதி இ.கேதீஸ்வரன், கலாநிதி ப.நாகேந்திரன் ஆகிய இருவருக்கும் சங்கீத சாணக்கிய விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.









# சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் மாசி மக வழிபாடுகள்

குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் மாசி மகத்தை முன்னிட்டு விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து மகேசுவர பூசையும் நடைபெற்றது. குப்பிளான் கிராமத்தை சேர்ந்த குழந்தைகள் பலர் வழிபாடுகளில் பங்குபற்றி இருந்தார்கள்.







# நல்லை ஆதீனத்திற்கு வருகைதந்த இந்திய துணைத்தூதுவர் திரு.சாய்முரளி

இலங்கைக்கான இந்திய தூதுவர் திருவாளர் சாய்முரளி அவர்கள் நல்லூர் ஆதினத்திற்கு வருகைதந்து நல்லை ஆதீன குரு முதல்வரிடம் ஆசி பெற்றார். அதோடு கலாநிதி. ஆறு திருமுருகன் அவர்களோடும் குரு முதல்வ-ரோடும் ஈழத்தில் தமிழ் மக்கள் மற்றும் சைவசமயத்தின் நிலை தொடர்பாகவும் கலந்துரையாடினார்.









# இளவாலையில் புதிய நோயாளர் விடுதி உதயமாகிறது




செஞ்சொற்செல்வரின் ஆசி உரையுடன் இளவாலை பிரதேச வைத்திய சாலையில் புதிய நோயாளர் விடுதி திறந்துவைக்கப்பட்டுள்ளது. இவ் நிகழ்வில் கௌரவ வட மாகாண ஆளுனர், முன்னாள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேதநாயகன் உட்பட்ட பல உயர் அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

இவ் நிகழ்வில் உரையாற்றிய செஞ்சொற்செல்வர் அவர்கள் யாழ்ப்பாண மருத்துவ பீடத்தினை ஒரு தமிழ் பேராசிரியர் எவ்வாறு பல சிரமங்களிற்கு மத்தியில் உருவாக்கினார் என்ற வரலாற்றினை மிகவும் சிறப்புற எடுத்துக் கூறினார். தற்காலத்தில் மறக்கட்ட பல கடந்த கால வரலாறுகளை இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளாதன் காரணமாக மருத்துவ துறையினை உருவாக்கிய தமிழ் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களை மறந்து விட்டனர் என கவலை தெரிவித்தார்..

யாழ் மருத்துவ பீடத்தில் இருந்து பல ஆயிரம் மருத்துவர்கள் வெளியேறி உலகம் முழுவதும் சிறப்புடன் பணியாற்றி வருகின்றார்கள் ஆனால் எவருமே பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களை நினைவுகூருவதில்லை என்பது மிகவும் வேதனையாக உள்ளது என தெரிவித்தார்.





# உன்னை விட உயர்ந்தது இல்லை



ஒன்றை விட ஒன்று சிறந்ததாக இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டு, மனதை மாற்றிக்கொண்டே செல்லக் கூடாது. எப்போதும் உன்னை விட உயர்ந்தவர் இல்லை என்று நினைக்க வேண்டும். அது ஒரு ஜென் மடாலயம். அங்கிருந்த சீடர்களுக்கு தத்துவ கதை ஒன்றை குரு கூறினார். அந்தக் கதை இதுதான்.

அவன் ஒரு கல் உடைக்கும் தொழிலாழி. அந்த தொழிலில் அவனுக்கு பெரிய வருமானம் ஒன்றும் கிடைக்கவில்லை. அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதே பெரும் சுமையாக இருந்தது. அதனால் அவனுக்கு வாழ்க்கையே வெறுப்பாக இருந்தது. ஒரு நாள் அவன் போன வழியில் ஒரு பணக்கார வீடு தென்பட்டது. அந்த வீட்டின் வாசல் வழியே அவன் கண்ணில் பட்ட அத்தனை பொருட்களும்,செல்வங்களும் அவனை விழிபிதுங்க வைத்தன.

அடடா... அந்த பணக்காரனுக்கு எத்தனை செல்வாக்கு பணக்காரன் மீது பொறாமையாக இருந்தது. தனக்கும் அப்படி ஒரு வாழ்க்கை கிடைத்தால் எப்படியிருக்கும்? என நினைத்துப் பார்த்தான். என்ன அதிசயம்! அவன் பணக்காரனாகி விட்டான். வாழ்க்கையில் அவன் நினைத்துப் பார்த்திராத அளவுக்கு செல்வங்கள் குவிந்து விட்டன.

மற்றொரு நாள் ஒரு பெரிய அரசு அதிகாரி பல்லக்கில் வெனை கடந்து சென்றார். அந்த அதிகாரியின் பின்னே பல சேவகர்கள், படை வீரர்கள். மக்கள் பயந்து கும்பிட்டு வழிவிட்டனர். அதிகாரியின் உத்தரவு தூள் பறந்தது. எப்பேர்ப்பட்ட பணக்காரனும் விழுந்து வணங்கினான். இப்போது கல் உடைப்பவன் மனசெல்லாம் அந்த அதிகாரிதான் நின்றார். "இருந்தா இப்படியல்லவா இருக்கணும் என்னா அதிகாரம்" என்று நினைத்தான். அவன் நினைப்பு பலித்தது. பெரும் அதிகாரம் படைத்த அதிகாரியாகி விட்டான். அவனைப் பார்த்தாலே எல்லோரும் பயந்தனர். கொஞ்ச நாளில் மக்கள் வெறுக்கும் அளவுக்கு அதிகாரம் எல்லை மீறிப் போனது.

ஒரு கோடை நாள், தனது பல்லக்கில் பயணித்துக் கொண்டிருந்தான். இப்போது அதிகாரியாக இருக்கும் கல் உடைப்பவன். வெயில் சுள்ளென்று சுட்டது. இருக்கையில் உட்காரவே முடியாத அளவு வெப்பம் தகித்தது. அண்ணாந்து பார்த்தான். வானத்தில் கம்பீரமாக தகதகத்தது சூரியன்! ஓ! உலகத்துக்கு மேலே உட்கார்ந்துகிட்டு இந்த சூரியன் என்னமா ஆட்டிப்படைக்குது. இருக்கட்டும்! நானும்சூரியனாகி எல்லாரையும் எனக்கு கீழே வச்சி வாட்டி எடுப்பேன்" என்றான்.

அவன் இப்போது சூரியனாகி விட்டான் !

தனது கிரகணங்களை பல மடங்கு வெப்பமாக்கி பூமியில் செலுத்தி அத்தனை பேரையும் துன்புறுத்தினான். அவனுக்கு விவசாயிகளும் தொழிலாளர்களும் சாபமிட்டனர். அந்த நேரம் பார்த்து ஒரு கரிய மெகம் கடந்து போனது. சூரியன் அந்த மேகத்துக்குள் மறைய மக்கள் மகிழ்ந்தார்கள்.

"ஓகோ மெகம் நினைச்சா சூரியனையே காலி பண்ணிடுமா ! அப்ப நானும் மேகமாகிட்டா போச்சு என நினைத்தான். நினைத்தபடி மெகமாகி விட்டான். இப்போது பூமியெங்கும் மழையை மடை நிறைந்த வெள்ளம் போல கொட்டினான். எங்கும் வெள்ளக்காடு. மக்கள் சபித்தனர். திடீரென பலத்த காற்று வீச, மேகம் தாக்குப் பிடிக்காமல் ஓடிப்போனது.

"இந்தக் காற்றுக்கு எவ்வளவு சக்தி ... நானும் காற்றாக மாறி உலகத்தை ஒரு வழி பண்றேன்." என்று நினைத்தான் மெகமாக இருந்த கல் உடைப்பவன்.

அப்படியே நடந்தது. மேகம் இப்போது வலிமையான காற்றாக மாறி, பூமியை ஆட்டிப் பார்த்தது. மரங்களையும் வீடுகளையும் பெயர்த்தெடுத்த வீசியது. மக்கள் கோபமாகி திட்டித் தீர்த்தனர். அப்போது திடீரென எதோ ஒரு ெரிய உருவம் தடுத்து நிறுத்தியது போல உணர்வு. பார்த்தால் ஒரு பெரும் பாறை.

"காற்றையும் தடுக்கும் அளவு இந்தப் பாறைக்கு பலமா, நானும் பாறையாவேன்" என்றான். பாறையானான் . பூமியில் யாராலும் அசைக்க முடியாத பலத்துடன் இருந்தான். அப்போதுதான் அந்த சத்தம் கேட்டது. ஒரு உளியை வைத்து தன் மீது யாரோ அடிக்கும் சத்தம்.

"அட... உலகின் சர்வ பலம் மிக்க இந்த பாறையை விட பலமானவன் யாரடா அது?." என்று பார்த்தான், பாறையாக இருந்த கல் உடைப்பவன்.

அந்தப் பாறையை உளியால் உடைத்துக் கொண்டிருந்தான் ஒரு கல் உடைப்பவன்.

கதையை சொல்லி முடித்த குரு, "ஒன்றை விட ஒன்று சிறந்ததாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு மனதை மாற்றிக் கொண்டே செல்லக் கூடாது. எப்போதும் உன்னை விட உயர்ந்தவர் இல்லை என்று கதையை சொல்லி முடித்த குரு, "ஒன்றை விட ஒன்று சிறந்ததாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு, மனதை மாற்றிக் கொண்டே செல்லக் 4டாது. எப்போதும் உன்னை விட உயர்ந்தவர் இல்லை என்று நினைக்க வேண்டும்" என்றார்.

# மயிலிட்டியில் மாகாண சுகாதார பயிற்சி நிலையம்

மாகாண சுகாதார பயிற்சி நிலையம் மயிலிட்டியில் திறந்து வைக்கப்பட்டது.மயிலிட்டி பகுதியில் சுகாதார திணைக்களத்திற்குரியகாணி 1990 ஆம் ஆண்டுக்கு பின்னர் பயன்பாடற்ற நிலையில் தற்போது பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.இதன் மூலம் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



